LIBRARY
2 1 JAN 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 21st October 1964.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: As the hon. Members who gave notice of questions Nos. 41 to 50 are not in their seats, the questions and answers will be printed in the proceedings.

பள்ளியிறுதித் தேர்வுக்குத் தனி மாணவர்கள்

*41. கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளியிறுதித் தேர்வுக்கு பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு வரை படிக்காமலேயே மாணவர்கள் எழுத அனுமதிக்கப் படுகின்றனரா?

(இ) அவ்வாறு அனுமதிக்கப்படுகிறவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் யாவை?

(உ) நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஆண்களுக்கும், பெண் களுக்கும் வேறுபாடு உண்டா?

பதில்.—(அ) & (இ).—ஆம். அடியிற்கண்ட விஷயங்களில் மட்டும்.

(1) ஹையர் எலிமெண்டரி கிரேடு பெற்ற ஆசிரியர் சான்றிதழ் வைத்துள்ளவர்கள், பண்டிதர்கள், முன்ஷிக்கள், நெசவுப் பயிற்சி ஆசிரியர்கள் போன்ற ஆசிரியத் தொழில்புரிபவர்கள் (அவர்கள் தமிழ்நாடு கல்வி விதிகளின் 13-வது விதியின்படி நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்). மேலும், சென்னைக் கல்வித் துறை நெறியாளரின் மேலாதிக்கத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பயிற்சிப் பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வில் தேறிய பிறகு குறைந்தபட்சம் மூன்றாண்டு களாவது ஆசிரியர்களாய் முழுநேரப் பணியாற்றி இருக்க வேண்டும். எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயமாக, மேற் சொன்ன நிபந்தனைகள் பயன்படும். மற்றவர்கள் விஷயமாக, அவர்கள் பணியாற்றும் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதியைப் பெற்ற பிறகு அவர்கள் இத்தேர்விற்காக அனுமதிக்கப்படுவர்.

(2) ஆங்கிலத்தை விருப்பப்பாடமாக எடுத்துக்கொண்டு VIII-ஸ்டாண்டர்டு தேறிய அல்லது மூன்றாவது படிவம் தேறிய, 20 வயது நிரம்பிய பெண்களும், எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கத் தேர்வில் தனிப்பட்ட முறையில் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

[21st October 1964

(உ) ஆம். எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கத் தேர்விற்கு தனிப் பட்ட முறையில் எழுத விரும்பும் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளையுடையவர்களாயிருந்தால் அவர்கள் எல்லோரும் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலே சொன்ன (2) இனம் சம்பந்தமாக, குறிப்பிட்ட நிபந் தனைகளைப் பூர்த்தி செய்கிற பெண்கள் மட்டுமே அனுமதிக்கப் படுகிறார்கள்.

சதாசார சமதி, சென்னை.

* 42. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னையிலுள்ள சதாசார சமதி மூலமாக இதுவரை லஞ்ச ஊழல் சம்மந்தமான புகார்கள் எவ்வளவு வந்திருக்கின்றன?

(இ) அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்.—(அ) ஒன்றுமில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

மகளிர்க்கான கடிகாரம் இணைப்புத் தொழிற்சாலை.

* 43. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப் பாரா—

மகளிர்க்கான பல தொழில் கல்லூரிகளில் கடிகாரம் இணைக்கும் தொழில் கல்வியும் ஒரு பாடமாக அமைதல் வேண்டும் என்று மதிப்பீட்டுக்குழு செய்த பரிந்துரைமீது அரசு எடுத்தி ருக்கும் முடிவு யாது?

பதில்.—இந்திய அரசாங்கத் திட்டத்தில் இத்தகைய பாடமுறை எதுவும் சேர்க்கப்படவில்லை. இப் பாடமுறையை ஆரம்பிக்க முடியுமா என்பது தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

பொறியியல் துறையில் பகுதிநேரப் பட்டப்படிப்பு

* 44. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :
திரு. மு. கருணாநிதி : } கனம் கைத்தொழில்
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா ?

தொழில் துறையில் பணிபுரிபவர் வேலையில் இருந்து கொண்டே மேலும் உயர்ந்த பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப் பளிக்கும் வகையில் வகுப்புக்களைத் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? ஆமெனில், எந்த ஆண்டு முதல்?

பதில்.—என்ஜினியரிங் டிப்ளமோ தேர்ச்சி பெற்றவர்களுக்காக பகுதிநேரப் பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்கான விரிவான திட்டத்தையும் பாடத்திட்டங்களையும் தயாரிக்க